மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:—

(அ) புகார் மனு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

(ஆ) தக்க விசாரணையின் பின் சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரி மீது பத்மநாபபுரம் கோட்ட வளர்ச்சி அலுவலர் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

நெல்லை நகராட்சியின் கீழுள்ள கடைகள் குத்தகை.

*வினா எண் 489— திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லை நகர் மன்றத்திற்குச் சொந்தமான 'தந்தை பெரியார் பேருந்து நிலையத்திலுள்ள' கடைகள் கடைசியாக எப்போது ஏலத்திற்கு விடப்பட்டது?

(ஆ) அந்த கடைகளின் ஏலம் எப்போது காலாவதி ஆகும்?

(இ) காலாவதி ஆகும் கடைகளின் ஏலக் குத்தகை தொடர்ந்து நீட்டித்துத் தரப்பட்டுள்ளதா ?

(ஈ) ஆம் எனில், எந்த அடிப்படையில் ஏலக் குத்தகை நீடிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :—

(அ) 1976-ம் ண்டு மார்ச் திங்கள் 12-ம் நாள்.

(ஆ) 1977-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாளில்.

(இ) புதுப்பிக்கக் கோரியவர்களுக்குப் புதுப்பித்துத் தரப்பட்டது.

(ஈ) 1978-ம் ஆண்டு மே திங்கள் 5-ம் நாளில் இதுபற்றி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

விசைத்தறித் தொழிலாளர் குறைந்த பட்ச ஊதியம்.

* வினா எண் 490— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விசைத்தறித் தொழிலாளர்களுக்கென அரசால் அறிவிக்கப்பட்ட குறைந்த பட்ச சம்பள உத்தரவு பல நிறுவனங்களில் அமுலாக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதனை அமுலாக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

1979 மார்ச் 20]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :—

(அ) விசைத்தறித் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயித்து அரசு வெளியிட்ட அறிக்கையினை உயர்நீதிமன்றம் செல்லாது என்று அறிதுவித்விட்டபடியால் அவ்வறிக்கை இப்பொழுது செயலில் இல்லை.

(ஆ) குறைந்த அளவு ஊதிய வீதங்களை மீண்டும் நிர்ணயித்து அறிவிக்கை ஒன்று வெளியிட அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மாநில அரசு...........

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி போட்டவன் நான்—எனக்கு முதலில் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, எந்த அடிப்படையில் உயர்நீதிமன்றம் இந்தச் சட்டம் செல்லாது என்று அறிவித்துள்ளது. அப்படி அறிவித்திருந்தாலும் கூட உடனடியாக மீண்டும் ஒரு அறிக்கை தயாரித்து அதை உடனடியாக அமுல் படுத்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, விதி 9-ன் கீழ், தொழிலாளர்கள், தொழில் அதிபர்கள் இருவரும் சரிசமமாக இருக்க வேண்டும் என்றிருக்கிறது. அதற்குப் பதிலாக, சரிசமமாக இல்லாத காரணத்தினால் செல்லாது என்று உயர்நீதி மன்றம் அறிவித்து விட்டது. இந்தச் சட்டப் பிரிவு 3-ஐ உபயோகப்படுத்தி அரசே கூலி நிர்ணயித்து விடலாமா என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கேள்வி எண் 489-ல் மாண்புமிகு திரு. யூசுப் அவர்கள் கொடுத்திருந்த கேள்வியில் எங்களைத்தான் துணைக் கேள்விகள் கேட்க அனுமதிக்கவில்லை. ஆளும் கட்சி உறுப்பினர்களையாவது கேட்க அனுமதித்திருக்கலாம். நாங்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு இந்தக் கேள்விகளை எல்லாம் தயார் செய்து கொடுக்கிறோம். இப்படி எங்களைத் துணைக் கேள்விகள் கேட்க அனுமதிக்க மாட்டேன் என்கிறீர்கள். உங்கள் கட்சி ஆட்களுக்காவது கொடுத்திருக்கலாம் என்று தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் இப்படி எழுந்து எழுந்து கேள்விகள் கேட்டுக் கொண்டே இருந்தால் நான் என்ன செய்வது. தலைவருக்கே ஆலோசனை கொடுக்கிறீர்கள். நான் மறு கேள்விக்குப் போய் விட்டால், அதற்குப் பிறகு நீங்கள் முதல் கேள்வியில் கேள்வி கேட்க முடியாது.

1979 மார்ச் 20]

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, நீங்கள் கையைத் தூக்கினால்கூட துணைக் கேள்விகள் கேட்க அனுமதிக்கவில்லை. நாங்கள் இங்கே பேச வேண்டும் என்றுதான், கேள்விகள் கேட்க வேண்டும் என்றுதான் இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள் அரங்கநாதன். அரங்கநாதன் கேட்காவிட்டால், சுப்பு கேட்கிறார். கிட்டப்பா கேட்கிறார். ஒவ்வொரு கட்சிக்காரர்களுக்கும், அந்தக் கட்சியில் உள்ளவர்கள் யாரையாவது கேள்வி கேட்க அனுமதிக்கத்தான் செய்கிறேன். நீங்கள் மட்டும் இப்படி பேசுவதற்கு என்ன காரணம்? மற்ற கட்சிக்காரர்கள் இப்படி பேசவில்லை. இந்த அவையை அவையாக மதித்து நடந்து கொள்ளுங்கள். எதை வேண்டுமானாலும் பேசலாம் என்பது தவறு.

(முற்பகல் 10–00)

திரு. சென்னை மு. அரங்கநாதன் : உங்களுக்கும் சேர்த்துத் தான் அந்தக் கடமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்றக் கட்சிக்காரர்கள் நான் சொல்வதைக் கேட்கிறார்கள். அந்த அடிப்படையில் நீங்களும் தலைவரை மதித்து நடந்து கொள்ளுங்கள். தாங்கள் மரபைக் காப்பாற்றத் தயாராக இல்லை என்றால் எப்படி அவையை நடத்துவது? உட்காருங்கள்.

திரு. துரை கலியமூர்த்தி : எங்களுக்கும் துணை வினாக்கள் எழுப்ப அனுமதி அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என் கண் பார்வையில் படுகிற எல்லோருக்கும் நான் வாய்ப்புத் தருகிறேன். அதற்கு மேல் என்னால் ஒன்றும் செய்ய முடியாது.

491 முதல் 499 வரை உள்ள வினாக்களும், விடைகளும் அச்சடித்து மேசை மீது வைக்கப்படும். வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].